UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

# 'மென்தமிழ்' – தமிழ்ச் சொல்லாளர்!

*தமிழுலகத்திற்கு அன்பு வேண்டுகோள்!*

*2011ஆம் வெளிவந்த 'மென்தமிழ்' தமிழ்ச்சொல்லாளர் தனது 15 ஆண்டுகால வரலாற்றுடன் தற்போது 6ஆவது பதிப்பாக நீடித்துவருகிறது. தமிழ் நாடு அரசின் 'தமிழ்நாடு முதலமைச்சர் கணினித்தமிழ் விருது' பெற்ற இந்த மென்பொருள் தமிழ்நாடு அரசு அலுவலகங்கள், நாளிதழ், வார இதழ்கள், பொதுமக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், ஆய்வாளர்கள் என்று பல தரப்புகளிலும் இன்று பயன்படுத்தப்பட்டுவருகிறது.*

*தமிழ்நாடு மட்டுமல்லாமல், சிங்கப்பூர், மலேசியா, இலங்கை போன்ற நாடுகளிலும் 'மென்தமிழ்' பெருமளவில் பயன்படுத்தப்பட்டுவருகிறது. தமிழ் இலக்கணம், கணினிமொழியியல், மொழித் தொழில்நுட்பம் ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இந்த மென்பொருள் கணினித் தொழில்நுட்பத்திலும் உலக அளவிலான புதிய மென்பொருள் கருவிகளைக் கொண்டு சிறப்பாக உருவாக்கப்பட்டுள்ளது. எம் எஸ் வோர்டுக்கு இணையான தமிழ் மென்பொருள் இது. ஒருங்குறி எழுத்துரு, 18 வகையான விசைப்பலகைகள், தமிழ்ச் சொற்பிழை, சந்திப்பிழை திருத்தும் மொழிக்கருவிகள், எம் எஸ் ஆபிஸ் மென்பொருள்களிலும் பயன்படும் உட்செருகி (Add-in), குறும்பலகை (Simple Pad) போன்ற பல மொழிக்கருவிகளுடன் உருவாக்கப்பட்டுள்ள முதல் தமிழ் மென்பொருள் இது.*

*தற்போது கணினியுலகில் வளர்ச்சியடைந்துள்ள செய்யறிவுத்திறன் தொழில்நுட்பத்தையும் உள்ளடக்கிய ஒரு தமிழ்ச்சொல்லாளராக 'மென்தமிழ்' தமிழ்ச் சொல்லாளர் மென்பொருளை வளர்த்தெடுக்கத் தற்போது முயல்கிறோம். ஆங்கிலமொழிக்குத் தற்போது உருவாக்கப் பட்டிருக்கும் "Grammarly" "QuillBot" போன்று மேலும் திறன்மிக்க ஒரு தமிழ்ச்சொல்லாளரைத் தமிழுலகத்திற்கு வழங்கவேண்டுமென்பதே எங்கள் நோக்கம்! தமிழைப் பயன்படுத்தும்போது பிழைகள் ஏற்பட்டுவிடுமோ என்று யாரும் பயப்படாமல் தமிழை அனைத்திலும் பயன்படுத்த உதவவேண்டும்!*

*தமிழர்கள் அனைவரின் கணினியிலும் 'மென்தமிழ்' இடம்பெறவேண்டும்! இவையே எங்கள் குறிக்கோள்!*

*மேற்குறிப்பிட்ட குறிக்கோளை நிறைவேற்றுவதற்காகப் பல தடைகளுக்கிடையே எங்கள் நிறுவனம் தொடர்ந்து முன்னேறிவருகிறது. மேற்குறிப்பிட்ட வகையில் எங்கள் முயற்சியைத் தொடரத் தமிழ்ச் சமுதாயத்தின் ஆதரவு எங்களுக்குத் தேவை. ஆங்கிலம் உட்படப் பிறமொழிகளுக்கான மென்பொருள்களை உருவாக்கப் பயன்படுத்தப்படும் அதே கணினித்தொழில்நுட்பமே தமிழுக்கும் பயன்படுத்தப்படவேண்டும்.*

*தமிழ் மக்களின் ஆதரவை மட்டுமே சார்ந்து கடந்த 15 ஆண்டுகளாக எங்கள் குழுவினர் பல இடர்களுக்கிடையே தமிழுக்கான பலவகை மென்பொருள்களை உருவாக்கி வருகின்றனர். தமிழ் இலக்கணம், மொழியியல், கணினிமொழியியல், கணினியியல், செய்யறிவுத்திறன் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் முறையான கல்வியும் பயிற்சியும் பெற்றவர்களைக் கொண்டது எங்கள் குழு.*

# 'மென்தமிழ்' – தமிழ்ச் சொல்லாளர்!

தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், சிங்கப்பூர், மலேசியா போன்ற பிற நாடுகளிலும் தமிழன்பர்கள் எங்களுக்குப் பலவகைகளில் உதவிவருகிறார்கள். சிங்கப்பூர் தமிழாசிரியர்களுக்கான சிங்கப்பூர்க் கல்வி அமைச்சகத்தின் மூன்று பெருந் திட்டங்களை - சிங்கப்பூர் எழுத்துத்தமிழ் தரவகம், தமிழ் - ஆங்கில மின்னகராதி, தமிழுக்கான மின்-தமிழ் இலக்கணம் - நிறைவேற்றிக் கொடுத்துள்ளோம். தமிழ்நாடு அரசு தமிழ்வளர்ச்சித்துறைக்கு மின் - ஆட்சிச்சொல் அகராதி, அயற்சொல்- தமிழ்ச்சொல் அகராதி, இணைச்சொல் - எதிர்ச்சொல் அகராதி ஆகியவற்றை உருவாக்கி அளித்துள்ளோம். தொல்காப்பியத் தரவக ஆய்வுத் திட்டத்தையும் எங்கள் ஆய்வாளர்கள் தமிழ் இணையக் கல்விக்கழகத்திற்கு உருவாக்கி அளித்துள்ளார்கள். விரைவில் தமிழ் மாணவர்களுக்கான கணினிவழி - சந்தி கற்றல் மென்பொருள் வெளிவரவிருக்கிறது.

இந்நிலையில் எங்கள் பணியைத் தடையின்றித் தொடரத் தமிழுலகத்தின் உதவியை நாடுகிறோம். தற்போது விற்பனையில் கிடைக்கும் **மென்தமிழ்** தமிழ்ச்சொல்லாளரைப் பெருமளவில் தமிழன்பர்கள் வாங்குவதுமூலமே இம்மென்பொருளையும் ஏனைய கணினித்தமிழ் ஆய்வையும் அடுத்த கட்ட வளர்ச்சிக்குக் கொண்டுசெல்லமுடியும். செய்யறிவுத்திறன் நுட்பத்தையும் உள்ளடக்கிய - உலகத்தரம் வாய்ந்த மென்பொருளாக '**மென்தமிழைத்**' தமிழுலகத்திற்கு வழங்கமுடியும்.

இப்பணியைத் தொடரத் தேவையான நிதிவசதி கிடைத்தால், இன்னும் ஆறுமாதங்களில் **மென்தமிழ்** தமிழ்ச்சொல்லாளரைத் தமிழுலகம் எதிர்பார்க்கும் செய்யறிவுத்திறனையும் உள்ளடக்கிய மென்பொருளாக வளர்த்தெடுத்து அளிக்கமுடியும். அதற்கான அடிப்படைப் பணிகளைத் தொடங்கிவிட்டோம்! **மென்தமிழ்** தமிழ்ச்சொல்லாளர் ரூ, ஆயிரத்து நூற்றெண்பதுக்கு அளிக்க எங்கள் நிறுவனம் முன்வருகிறது. இப்போது **மென்தமிழை** வாங்கும் நண்பர்களுக்கு 2026 தைப்பொங்கலையொட்டி செய்யறிவுத்திறனை உள்ளடக்கிய **மென்தமிழ்** தமிழ்ச்சொல்லாளர் எவ்விதக் கட்டணமும் இன்றி அளிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

உலக அளவிலான கணினித் தொழில்நுட்பத்தைத் தமிழுக்குக் கொண்டுவந்து சேர்க்கும் ஒரே நோக்கத்தில் செயல்படும் எங்களுக்கு மேலும் ஊக்கம் தரும் வகையில் தமிழ் ஆர்வலர்கள் உதவ வேண்டுகிறோம்.

என் டி எஸ் லிங்க்சாஃப்ட் நிறுவனத்தின் சார்பாக,

பேரா. ந. தெய்வ சுந்தரம்

contact@lingsoftsolutions.com +91 97890 59414